**செங்கல்பட்டு மாவட்டம், அரசு தொழிற்பயிற்சி நிலைய விளையாட்டு மைதானத்தில் 71-வது குடியரசு தினவிழாவில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ.ஜான் லூயிஸ், இ.ஆ.ப. அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு, பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 72 பயனாளிகளுக்கு ரூ.70.63 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.**

--------

செங்கல்பட்டு மாவட்ட அரசு தொழிற்பயிற்சி நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 71-வது குடியரசு தினவிழாவில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ.ஜான் லூயிஸ், இ.ஆ.ப. அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று இந்திய திருநாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட சுதந்திர தியாகிகளை பொன்னாடை அணிவகுத்து கௌரவித்தார். மேலும் ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து செங்கல்பட்டு மாவட்ட பிரிவினைக்கு சிறப்பு அலுவலராக பணியாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ.ஜான் லூயிஸ், இ.ஆ.ப. அவர்களுக்கு செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. கா.பிரியா அவர்கள் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார்.

வருவாய்த்துறை சார்பில் இலவச வீட்டுமனைப்பட்டா 40 நபர்களுக்கும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பாக 1 நபருக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர மிதிவண்டியும், வேளாண்மை துறை சார்பாக பவர்டில்லர், டிராக்டர் மற்றும் இதர விவசாய உபகரணங்கள் 10 நபர்களுக்கும் முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பாக AMG 2 நபர்களுக்கும் தோட்டக்கலை துறை சார்பாக ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தோட்டப்பயிர் வகைகள் ஆகமொத்தம் 72 பயனாளிகளுக்கு ரூபாய் 70.63 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் பணிபுரியும் வருவய்த்துறை, கல்வித்துறை, வேளாண்மைத்துறை, மாற்றுத் திறனாளிகள் துறை, சுகாதாரத்துறை, நகராட்சி, பேரூராட்சித்துறை , காவல்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 190 அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதலும் மற்றும் கலை நிகழ்ச்சியில் பங்கு பெற்ற 508 பள்ளி மாணவ / மாணவியர்கள் நற்சான்றிதழும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் போக்குவரத்துத் துறை சார்பில் 31-வது சாலைபாதுகாப்பு குறித்த தலைக்கவசம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந் நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. டி.கண்ணன், மாவட்ட வருவாய் அலுவலர், திருமதி. கா.பிரியா, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. விஜயகுமாரி, தனித்துணை ஆட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம் திரு. ஜெயதீபன், செங்கல்பட்டு வருவாய் கோட்டாட்சியர் திரு. செல்வம், மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி. லட்சுமிபிரியா மற்றும் இதர அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.